இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 228 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 15 – சனிக்கிழமை 29 மார்ச் 2025 – மதுரை 16 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 228 : Thiruvalluvar Year - 2056 - Panguni 15 - Saturday 29 March 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## காவல்துறைக்குக் களங்கம் ஏற்படுத்த சதி! அமைதியாக இருக்கும்

# தமிழ்நாட்டின் பெயரைக் கெடுக்க துணை போகாதீர்கள்!

## சட்டப்பேரவையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, மார்ச் 29-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று (28.3.2025) நேரமில்லா நேரத்தில் சட்டம்ஒழுங்குப் பிரச்சினை குறித்து முன்னறிவிப்பு ஏதுமின்றி கேள்வி எழுப்ப முயன்று, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இந்த அவைக்கும், அவையின் மூலம் நாட்டு மக்களுக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, தமிழ்நாட்டில் பொது அமைதி நிலவுகிறது. பெரிய சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏதுமின்றி, மக்கள் அமைதியாக, இணக்கமாக வாழ்கிறார்கள். இதனால்தான் தொழில் முதலீடு, புதிய தொழிற்சாலைகள், இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் என தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

**காவல்துறைக்கு இழுக்கு ஏற்படுத்தத் திட்டம்!**

இந்த நேர்மறையான சூழலைத் தாங்கிக்கொள்ள முடியாத சில மாநில விரோத சக்திகள், தமிழ் மக்கள் விரோத சக்திகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கக்கூடிய கொலை, கொள்ளை போன்ற ஒரு சில நிகழ்வுகளை ஊதிப் பெரிதாக்கி, மக்களை பீதியில் வைக்க இரவு பகலாக மக்களின் பாதுகாப்பிற்காக உழைத்துக் கொண்டிருக்கும் நம்முடைய தமிழ்நாட்டு காவல்துறைக்கு இழுக்கு ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கு பிரதான எதிர்க்கட்சியும் துணை போகிற வகையில் தூபம் போடுகிறது. சில ஊடகங்களும், பத்திரிக்கைகளும் சேர்ந்து துணை போவது இன்னும் வேதனை அளிக்கிறது.



தமிழ்நாடு அரசின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி விடமுடியுமா என துடிக்கிறார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் எத்தகைய கலவரங்கள் நடைபெற்றன என்பது அனைவருக்கும் தெரியும். அது போன்ற எந்தக் கலவரமும் இந்த ஆட்சியில் இல்லை. குற்றங்களின் எண்ணிக்கை இந்த ஆட்சியில் குறைந்து வருகிறது. புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்குகள் போடப்படுகின்றன; குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படுகிறார்கள். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர்கள் மீது வழக்கு போடப்படுகிறது; தண்டிக்கப்படுகிறார்கள்; கைது செய்யப்படுகிறார்கள். இதுதான் உண்மை. இப்படி பல்வேறு உறுதியான நடவடிக்கைகள் எடுத்து மக்களை காவல் துறையும், தமிழ்நாடு அரசும் பாதுகாத்து வருகிறது.

ஆகவே, சில நேரங்களில் நடைபெறும் குற்றச் சம்பவங்களை வைத்து தமிழ்நாட்டில் சட்டம்ஒழுங்கே சீர்கெட்டு விட்டதாக மக்களை திசைதிருப்புவதற்காகவே வீண் புரளிகளை கிளப்பாமல், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும், அவர் கூட்டணி வைக்கக் துடித்துக் கொண்டிருக்கக் கூடிய கட்சியாக இருந்தாலும் ஆக்கபூர்வமான அரசியல் செய்ய முன்வாருங்கள்.

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் உங்களுடைய அம்மையார் அவர்களின் ஆட்சியிலும் சரி, தற்போது எதிர்க்கட்சித் தலைவரின் முந்தைய ஆட்சியிலும் சரி, இப்போது எங்களது ஆட்சியிலும் நடைபெறும் குற்றச் சம்பவங்களின் தரவுகளை வைத்துத்தான் காவல்துறையின் செயல்பாட்டை அளவிட முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பிட்ட சில சம்பவங்களை வைத்து, சட்டம் ஒழுங்கு குறித்த தவறான பிம்பத்தை உருவாக்க வேண்டாமென இந்தத் தருணத்தில் ஊடகங்களையும் நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அரசின்மீது ஆக்கபூர்வமான குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டுங்கள். அரசியல் செய்வதற்காக தமிழ்நாடு காவல் துறையின் பெயரையும், அமைதியான மாநிலம் தமிழ்நாடு என்று இருக்கக்கூடிய பெயரையும் கெடுப்பதற்குக் துணை போகாதீர்கள் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## நம் நகரங்கள் உலக அளவில் போட்டி போடக்கூடியவைகளாகத் திகழப் பாடுபடுவோம்!

# ஒட்டுமொத்த வளர்ச்சியே எங்கள் இலக்கு!

## இந்தியத் தொழில் கூட்டமைப்பின் மாநாட்டில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, மார்ச் 29-**

**நம் நகரங்கள் உலகளவில் போட்டி போடக் கூடியவைகளாகத் திகழ பாடுபடுவோம் என்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியே எங்கள் இலக்கு என்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பின் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.3.2025) சென்னையில் நடைபெற்ற, இந்திய தொழில் கூட்டமைப்பின் இந்திய நகரங்களில் வாழக்கூடிய சூழல்களை உருவாக்குவது குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-**

CII நடத்தும் இந்திய நகரங்களில் வாழக் கூடிய சூழல்களை உருவாக்குவது குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்திய தொழில் கூட்டாண்மை தென்னிந்திய மாநாடு 2025இல் "இந்திய நகரங்களில் வாழக்கூடிய சூழலை உருவாக்குதல்" என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் நான் அடைகிறேன்.

தமிழ்நாடு அரசும் இந்திய தொழில் கூட்டமைப்பும் பல ஆண்டு காலமாக இணைந்து செயல்பட்டு தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்தில், CII கூட்டமைப்பு, தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு செய்து வரும் முயற்சிகளுக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் நந்தினி ரங்கசாமி அவர்கள் இந்திய தொழில் கூட்டமைப்பின் தென்னிந்திய தலைவர் உள்ளிட்ட பல பொறுப்புகளில் நேர்மையாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார். அவர் தலைவராக இருக்கக்கூடிய ஜி.ஆர். ஜி.கல்விக் குழுமத்தைச் சேர்ந்த பி.எஸ். ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி தான் தமிழ்நாட்டிலேயே சிறந்த கல்லூரியாக கடந்த ஆண்டு N.I.R.F. தரவரிசையில் இடம் பெற்றிருக்கிறது என்பதே அவரின் தலைமைப் பண்பை எடுத்துக்காட்டுகிறது.

தொழில்துறை, பெண்கல்வி, மனிதநேய செயல்பாடுகள் என்று பல துறைகளில் சிறந்து விளங்கி தமிழ்நாட்டில் இருக்கும் பெண்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார் திருமதி. நந்தினி ரங்கசாமி அவர்கள். அவருக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.3.2025) சென்னையில் இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற இந்திய நகரங்களில் வாழக்கூடிய சூழல்களை உருவாக்குவது குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டல உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள் உட்பட பல்வேறு தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**இந்திய வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு!**

இந்தியாவின் வளர்ச்சியில், தமிழ்நாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தியாவிலேயே, இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு விளங்குகிறது. இந்தியாவின் உற்பத்தித் துறை மொத்த மதிப்புக் கூட்டலில், தமிழ்நாடு 12.11 விழுக்காடு பங்களிப்பு செய்கிறது. கடந்த 3 ஆண்டுகளில், தமிழ்நாடு 8 விழுக்காட்டுக்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சி கண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி தனித்தன்மை வாய்ந்தது. இந்த வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் வகையில், 2030ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாட்டை

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

**100 நாள் வேலைத் திட்ட ஊதியம் வழங்காத**

**ஒன்றிய அரசைக் கண்டித்து**

**தமிழ்நாடு முழுவதும் ஒன்றியங்கள் தோறும்**

**இன்று ஆர்ப்பாட்டம்!**